http://www.tamilnaduboard.com

No. of Printed Pages : 7

**4461**

பதிவு எண் | | | | | | |

**SEPTEMBER 2014**

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின்** மிகாது விடை எழுதுக. **3x4=12**

1. இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை?

2. நாடகத்தமிழின் சிறப்பியல்புகளாகப் பரிதிமாற் கலைஞர் கூறுவன யாவை?

3. உலகில் சமரசம் பரவாமைக்கான காரணங்களாகத் திரு. வி.க. கூறுவன யாவை?

4. கவிதை யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ் வொர்த், கோல்ரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?

5. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



**II.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளின்** மிகாது விடை தருக. **3x4=12**

6. 'ஆ' தெய்வத்தன்மையுடையது என்பதனை எடுத்துக்காட்டுக.

7. விறலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.

8. 'இரந்தும் உயிர் வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

9. முதல் தடுமாற்றம் என்று மு.வ. குறிப்பது யாது?

10. தமிழர்கள் பழங்காலந்தொட்டே பல கலைகளையும் பேணி வந்துள்ளனர் என்பதை விளக்குக.

**III.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** மட்டும் **இருபது வரிகளின்** மிகாது விடை தருக. **1x6=6**

11. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக

12. வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச் சாரம் கூறுவன யாவை?

**IV.** பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு** மிகாமல் விடை தருக. **2x10=20**

13. ''மண்'' **அல்லது** ''கிழிசல்'' என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**அல்லது**

"பழிக்குபழி" **அல்லது** "ஓர் உல்லாசப் பயணம்" என்னும் சிறுகதையின் நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



14. 'சட்டை' **அல்லது** 'பால்வண்ணம் பிள்ளை' என்னும் சிறுகதையின் கதை மாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**அல்லது**

'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' - இக்கதையில் காணப்படுவது போல் நாட்டு வழக்கம், ஊர் மரபுகளை நீ அறிந்தவாறு இருபக்க அளவில் ஒரு கட்டுரை வரைக

**அல்லது**

கோமதி மருமகளை வேறுபாடு கருதாமல் அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டதாக கற்பனையாக ஒரு கதையெழுதுக.

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

இட்டதோர் தாம ரைப்பூ
    இதழ் விரிந் திருத்தல் போல
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
    இரையுண்ணும் : அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை : குத்து மில்லை :
    வேறுவேறு இருந்து அருந்தும்
கட்டில்லை : கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கம் இல்லை

தாய் இரை தின்ற பின்பு
    தன்குஞ்சைக் கூட்டில் கண்டு
வாயினைத் திறக்கும் : குஞ்சு
    தாய் வாய்க்குள் வைக்கும் மூக்கை!
தாய்அருந் தியதைக் கக்கித்
    தன் குஞ்சின் குடல்நிரப்பும்!
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
    அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்!

- பாரதிதாசன்

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3x2=6

16. A penny saved is a penny gained.

17. Calm before the strom.

18. Experience will make a person efficient.

19. A law maker should not be a law breaker.

20. As is the King so are the subjects.

21. Applications received after closing date will not be entertained.

VII. 22. பின்வரும் **பழமொழிகளுள் ஒன்றினை** விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் **பத்து** வரிகளில் எழுதுக. 1x4=4

(அ) "பதறிய செயல் சிதறிப் போகும்"

(ஆ) *"மின்னுவதெல்லாம் பொன் அல்ல"*

(இ) "தன்வினை தன்னைச் சுடும்"

**அல்லது**

'மழை' அல்லது 'தென்றல்' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

**குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா** 5x2=10

**VI** மற்றும் **VII** - ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப் பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரையில் உள்ளவற்றில் **எவையேனும் ஐந்தனுக்கு** மட்டும் ஏற்புடைய விடையை எழுதுக.

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



தொல் பழங்காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல் பொருளியல் என்கிறோம். தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, தொழில்கள், வாணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் முதலியவை பற்றி அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தறிதலே தொல்லியலின் முதன்மையான நோக்கம். தொல்லியலை ஆங்கிலத்தில் 'ஆர்க்கியாலஜி' எனக் குறிப்பிடுவர்.

மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்து வரலாற்றுக்கு முந்தைய காலம் வரை உள்ள காலத்தையே தொன்மைக்காலம் என்கிறோம். அவ்வப்போது திட்டமிட்டுச் செய்யப்படும் ஆய்வுகளின்போதோ தற்செயலாகக் கிடைக்கும் தடயங்கள், எச்சங்களின் உதவியுடனோ தொன்மைக்கால நிகழ்வுகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிகிறார்கள்.

மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் இடம் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் ஒரு துறைமுக நகரம். அது சோழர்களின் கடற்கரை நகரம், இந்நகரம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இந்திய தொல்லியல் துறையினர் 1963 ம் ஆண்டு பூம்புகார் அருகில் உள்ள 'கீழார்வெளி' என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழ்வாய்வின் போது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறிப்பட்டன. இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத்துறை, அரைவட்டவடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம்(புத்தபிக்குகள் தங்குமிடம்), வெண்கலத்தாலான புத்தர்பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன. இவை பண்டைய காவிரிப்பூம்பட்டின மக்கள் பயன்படுத்திய பொருட்கள் என்பதும், காவிரிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் இருந்தது என்பதும் வலுவான சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள் :**

16. தொல்லியலை ஆங்கிலத்தில் எவ்வாறு குறிப்பிடுவர்?

17. சோழர்களின் கடற்கரை நகரம் எது?

18. தொல்லியல் என்பது யாது?

[ திருப்புக

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



19. தொன்மை காலம் - எது?

20. எந்தெந்த இலக்கியங்களில் காவிரிப்பூம்பட்டினம் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது?

21. கீழார்வெளியில் எந்த ஆண்டு கடல் அகழ்வாய்வு நடத்தப்பட்டது ? ஆய்வை மேற்கொண்டோர் யாவர்?

22. தொன்மைக்கால நிகழ்வுகளை எவற்றின் உதவியுடன் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. எனக்குப் பல வீடுகள் உள்ளது

(தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக)

24. நெல்லிகாய், தான்றிகாய், கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது 'திரிபலை' எனப்படும்.

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டெழுதுக)

25. வெண்ணிலாக் கலகலவென்றுச் சிரித்தாள்

(தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக)

26. ஸ்கூல் ஃபர்ஸ்ட் பெல் அடிச்சாச்சி. நான் லேட்டா போறேன்.

(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

27. யானை மேய்ப்பனோடு ஆட்டுப்பாகனும் வந்தான்.

(மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக)

http://www.tamilnaduboard.com

http://www.tamilnaduboard.com



28. 'கிலி' - 'கிழி' அல்லது 'ஒலி' - 'ஒளி'

(சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.)

29. ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா?

(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)

30. பந்து மித்திரர் சகிதம் வந்து ஆசிர்வதிக்கக் கோருகிறேன்.

(வடமொழிக் கலப்பினை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

31. குள்ளாய் என்ன விளை? என்று கேட்டு குலந்தை அலுதது.

(எழுத்துப் பிழைகளை திருத்தி எழுதுக)

32. உலகம் நாடாகவாவது இருக்கட்டும். காடாகவாவது இருக்கட்டும் எங்கே நல்லவர்களிருக்கின்றார்களோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும்.

(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக)

-o0o-

http://www.tamilnaduboard.com